**ஆகஸ்ட் - 04**

# TNPSC துளிகள்

- ஐக்கிய அரபு அமீரகமானது அரபுக் கடற்கரையோரத்தில் உள்ள அபுதாபியில் "பாரக்" என்ற தனது முதலாவது அணுக்கரு உலையைத் தொடங்கியுள்ளது.
- மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சரான ராம் விலாஸ் பஸ்வான் "ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டை" என்ற திட்டத்தை மேலும் 4 மாநிலங்கள், மணிப்பூர், நாகாலாந்து, உத்தரகாண்ட் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம் ஆகியவற்றிற்கு விரிவுபடுத்தியுள்ளார்.
- ஆப்பிள் நிறுவனமானது உலகின் மிகவும் மதிப்புமிக்க பங்குச் சந்தையில் பட்டியலிடப் பட்டுள்ள நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
    - இது சவுதியின் ஆரம்கோ நிறுவனத்தை இரண்டாம் இடத்திற்குத் தள்ளி உள்ளது.
- இந்தியா ஆகஸ்ட் 02 ஆம் தேதியன்று சர்வதேசத் தோழமை தினத்தைக் கொண்டாடியது.

# தமிழ்நாடு செய்திகள்


## சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களை மறுபெயரிடல்

- சென்னையில் உள்ள 3 மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு மாநிலத்தின் மறைந்த 3 முன்னாள் முதல்வர்களின் பெயர்களை இடுவதற்காக தமிழ்நாடு அரசு ஒரு ஆணையைப் பிறப்பித்துள்ளது.
- அந்த அரசாணையின் படி, ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையமானது "அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ" என்றும் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையமானது "புரட்சித் தலைவர் டாக்டர் எம் ஜி இராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ" என்றும் கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையமானது "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா சி.ம்.பி.டி மெட்ரோ" என்றும் அழைக்கப்படும்.
- தில்லி மெட்ரோ மற்றும் ஹைதராபாத் மெட்ரோ ஆகியவற்றிற்குப் பிறகு இந்தியாவில் உள்ள மூன்றாவது மிகப்பெரிய மெட்ரோ அமைப்பு சென்னை மெட்ரோ ஆகும்.




## சா. கந்தசாமி

- புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் மற்றும் ஆவணப்படத் தயாரிப்பாளரான சா. கந்தசாமி சமீபத்தில் காலமானார்.
- கந்தசாமி 1968 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தனது "சாயாவனம்" என்ற புதினத்தின் மூலம் தமிழ் இலக்கிய உலகத்திற்குள் நுழைந்தார்.
- இவருடைய நாவலான "விசாரணை ஆணையமானது" சிறந்த தமிழ் புதினத்திற்கான 1998 ஆம் ஆண்டின் சாகித்ய அகாதமி விருதினை வென்றுள்ளது.




# தேசியச் செய்திகள்

## கிராமோத்யோக் விகாஸ் யோஜனா

- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சகமானது "கிராமோத்யோக் விகாஸ் யோஜனா" என்ற திட்டத்தின் கீழ் அகர்பத்தியை உற்பத்தி செய்வதில் ஈடுபடும் கைவினைஞர்களுக்குப் பயன்படுவதற்காக வேண்டி ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- காதி மற்றும் கிராமத் தொழிற்துறை ஆணையமானது இந்தத் துறையில் பணியாற்றும் கைவினைஞர்களுக்குப் பயிற்சி மற்றும் உதவியை அளிக்க உள்ளது.

### ஸ்காச் தங்க விருது

- மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சகமானது தனது "தகவல் தொழில்நுட்பத்தினால் செயல்படுத்தப்படும் நிதியுதவித் தட்டங்களின் மூலம் பழங்குடியினருக்கு அதிகாரமளித்தல்" என்ற திட்டத்திற்காக ஸ்காச் தங்க விருதினைப் பெற்றுள்ளது.
- இது ஸ்காச் என்ற ஒரு சுயாதீன அமைப்பால் வழங்கப்படும் நாட்டின் ஒரு உயரிய குடிமை விருதாகும்.
- இது இந்தியாவை ஒரு சிறந்த தேசமாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட மக்கள், திட்டங்கள் மற்றும் நிறுவனங்களை அங்கீகரிக்கின்றது.
- இது நிறுவனங்கள்/அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் ஆகியோர்களுக்கு வழங்கப் படுகின்றது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### பெய்டோ

- பெய்டோ அமைப்பு தற்பொழுது முழுவதும் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக சீனா கூறியுள்ளது.
- இது அமெரிக்காவின் புவியிடங்காட்டி, ரஷ்யாவின் குளோனாஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கலிலியோ ஆகியவற்றை உள்ளடக்கிய விண்வெளியை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளை அளிக்கும் புகழ்பெற்ற குழுவில் இணைகின்றது.
- இந்தியாவினுடையது "இந்தியத் திரள்களுடன் கண்காணிப்பு (NaVIC/Navigation with Indian Constellation)" என்று அழைக்கப் படுகின்றது.
- இந்தியா தனது சொந்தக் கண்காணிப்பு அமைப்பான இந்தியப் பிராந்தியக் கண்காணிப்பு செயற்கைக்கோள் அமைப்பை (IRNSS - Indian Regional Navigation Satellite

System) மேம்படுத்திக் கொண்டிருக்கின்றது.

- IRNSS என்பது இந்தியாவினால் மேம்படுத்தப்பட்டு வரும் தன்னாட்சி பெற்ற பிராந்தியக் கண்காணிப்பு செயற்கைக்கோள் அமைப்பாகும்.
- இது இந்தியாவில் உள்ள பயனாளர்களுக்கும் அதன் எல்லையிலிருந்து 1500 கிலோ மீட்டர் வரையுள்ள பயனாளர்களுக்கும் துல்லியமான இருப்பிடம் குறித்த தகவல் சேவையை அளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரம்

- ஆந்திரப் பிரதேசத்தின் ஆளுநரான பிஸ்வா பூஷன் ஹரிசந்தன் ஆந்திரப் பிரதேச அனைத்துப் பகுதிகளின் பரவலாக்கம் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி மசோதா, 2020 என்ற மசோதாவிற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளார்.
- பரவலாக்கல் மசோதாவிற்கு வழங்கப்பட்ட அனுமதியானது அமராவதி, கர்நூல் மற்றும் விசாகப்பட்டினத்தை சட்டமன்றம், நீதித் துறை மற்றும் நிர்வாகம் சார்ந்த தலைநகர்களாக மேம்படுத்த வழிவகை செய்கின்றது.

## வால்மீகி சமூகம்

- வால்மீகி சமூகமானது ஜம்மு காஷ்மீரில் தமது இருப்பிடத்திற்கான சான்றிதழைப் பெற்றுள்ளது.
- தற்பொழுது இந்தச் சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வாழ்வதற்கான உரிமை, வாக்குரிமை, அரசுப் பணிகளுக்கான உரிமை, தொழில் சார் கல்லூரிகள் மற்றும் இடஒதுக்கீட்டிற்கான உரிமை ஆகியவற்றைப் பெற உள்ளனர்.
- இவர்கள் 63 ஆண்டுகளுக்கு முன்பு ஜம்மு காஷ்மீருக்கு அப்போதைய அரசின் கோரிக்கையின் பேரில் "துப்புரவுப் பணியாளர்களாக" வந்தனர்.

# முக்கிய தினங்கள்

## உலகத் தாய்ப்பால் ஊட்டல் வாரம்

- இது ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதத்தின் முதலாவது வாரத்தில் (ஆகஸ்ட் 01 முதல் 07 வரை) அனுசரிக்கப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இந்த வாரத்திற்கான கருத்துரு, "ஆரோக்கியமான புவி கிரகத்திற்காக வேண்டி தாய்ப்பால் ஊட்டலை ஆதரித்தல்" என்பதாகும்.

**World Breastfeeding Week: Support Breastfeeding For a Healthier Planet**

- இத்தினமானது 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இன்னோசென்ட்டி பிரகடனம் (Innocenti Declaration) கையெழுத்திடப் பட்டதைத் தொடர்ந்து, அன்று முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இது உலகத் தாய்ப்பால் ஊட்டல் செயல் கூட்டிணைவு (WABA - World Alliance for Breastfeeding Action), உலக சுகாதார நிறுவனம் மற்றும் யுனிசெப்பினால் அனுசரிக்கப் படுகின்றது.
- WABA என்பது தாய்ப்பால் ஊட்டலுக்கான தடைகளை ஒழிப்பதற்காக உலக அளவில் பணியாற்றும் மக்கள் குழுவைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★